**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 121/2002 |
| Prosecution Witness | : | **அ.சா.**15 |
| Name | : | **வஜ்ரவேல்** |
| Father's / Husband Name | : | **சுப்பிரமணி** |
| Address | : | **துறையூர்** |
| Age | : | 56/2025 |

**தேதி : 19.06.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் துறையூரில் வசித்து வருகிறேன். நான் ட்ரைவராக வேலை செய்கிறேன். எதிரிகள் 1 முதல் 3 வரையுள்ளவர்களை தெரிந்துகொண்டேன். அதில் இரண்டாம் எதிரி தற்போது உயிருடன் இல்லை. சாட்சிகள் ராஜாராம் மற்றும் ஜெயசந்தர் ஆகியோர்களை தெரியும். முதலாம் எதிரி எனது தூரத்து உறவினர் ஆவார். நான் எனது சொந்த ஊரான ஈச்சம்பட்டிக்கு செல்லும்போது அவருடன் பழக்கமானது. செய்திதாள்களில் முதலாம் எதிரி பலரிடம் வேலை வாங்கிதருவதாகவும், டாக்டர் சீட் வாங்கிதருவதாகவும் கூறி ஏமாற்றிவிட்டதாக படித்து தெரிந்துகொண்டேன். முதலாம் எதிரி சிறைக்குசென்றபோது அவர் சாட்சி ராஜாராமிடம் வேலை வாங்கிதருவதாக சொல்லி ஏமாற்றியதாக கேள்விப்பட்டேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வைத்த கோரிக்கையை ஏற்று சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அறிவித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலீஸார்விசாரணையில் கடந்த 10.07.1999 ் அன்று தான் ஈச்சம்பட்டிக்கு சென்றிருந்ததாகவும், அப்போது எதிரிகள் அங்கிருந்ததாகவும், அப்போது விழுப்புரத்தை சேர்ந்த ராஜராம் ஆசிரியர் என்பவர் தனது தெரிந்த நபருக்கு டாக்டர் சீட் வாங்கிகொடுப்பதற்காக முதலாம் எதிரியிடம் ரூபாய் 10 லட்சத்தை ரொக்கமாக கொடுத்ததாகவும், மேலும் ராஜராம் ஆசிரியருடன் மற்றும் சில ஆசிரியர்கள்இருந்தார்கள் எனவும், பணத்தை பெற்றுக்கொண்ட எதிரிகள் டாக்டர் சீட் வாங்கி தராமல் ஏமாற்றிவிட்டதாகவும் கூறிவிட்டு தற்போது உணமையை மறைத்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1 மற்றும் 3ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விவரத்தைதான் போலீஸார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.